Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C C.NO.135/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வசந்தகுமார் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பரசுராமன் | தொழில் | எலக்டிசன் |
| கிராமம் | பொன்னேரி | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 20 day of February 2023.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.- (1ம் எதிரி மூர்த்தி ஆஜரில் உள்ளார், எதிரிகள் விக்னேஷ், வினோத் மற்றும் தமிழ்செல்வம் மனுவின் பேரில் ஆஜர் இல்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் எலக்டிரிசனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டபடும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 25.10.2018 அன்று இரவு 7.00 மணியளவில் ராமானூர் கூட்ரோடு அருகே நானும் எனது நன்பர் உத்திரமூர்த்தி என்பவரும் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம், அந்த சமயம் ஏறி கோடி அருகே 1ம் எதிரி மூர்த்தியும் அவருடன் இரண்டு நபர்களும் உட்கார்ந்துக்கொண்டு இருந்தார்கள். எனது நன்பர் உத்திரமூர்த்தி 1ம் எதிரியிடம் ஏன் வெட்டியாக இங்கு உட்கார்ந்துக்கொண்டு இருக்கிறாய் என்று கேட்டார். பின்பு 1ம் எதிரி நான் உட்கார்ந்து இருந்தா உனக்கு என்ன என்று கேட்க 1ம் எதிரிக்கும், எனது நன்பர் உத்திரமூர்த்திக்கும் வாய் தகராறு ஏற்பட்டது, அதை நான் விலக்கிவிட்டேன். இந்த தகவலலை உத்திரமூர்த்தியின் அண்ணன் கனபதி என்பவரிடம் நானும் உத்திரமூர்த்தியும் கூறினோம். பின்பு இவ்வழக்கின் 4 எதிரிகளும் சேர்ந்து இரும்பு பைப்பை எடுத்துக்கொண்டு ராமானூர் கூட்ரோடு அருகே உள்ள பால் டைரி அருகே வந்தார்கள். அப்பொழுது 2ம் எதிரி விக்னேஷ் என்பவர் அ.சா.1 கணபதியை பிடித்துக்கொண்டார். பின்பு 1ம் எதிரி மூர்த்தி என்பவர் பைப்பால் அ.சா.1 கணபதியும் உடல் மீது அடித்தார். இதை நானும் உத்திரமூர்த்தியும்

விலக்கிவிட்டோம். அப்பொழுது 3ம் எதிரி வினோத் என்பவர் உத்திரமூர்த்தியை (அ.சா.2) பிடித்துக்கொண்டார். அப்பபொழுது 4ம் எதிரி தமிழ்செல்வன் என்பவர் அதே பைப்பால் அ.சா.2 உத்திரமுர்த்தியை தாடை, தலை ஆகிய இடங்களில் தாக்கிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டார்கள். பின்பு காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். மேலே குறிப்பிட்ட விவரங்களுக்கு தான் சாட்சியாக இருந்து நான் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் **உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்ததற்கும், அதன் பின்பு வழக்கு சொத்தான இரும்பு பைப் ஒன்றினை என் முன்பு கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். அதற்காக தான் மேலே குறிபிட்ட கையெழுத்தை நான் சாட்சியாக இருந்து செய்தீர்கள் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

போலிசார் என்னை ராமானூர் கூட்ரோட்டில் வைத்து 20.10.2018 அன்று விசாரித்தார்கள். நான் 25.10.2018 அன்று போலிசாரிடம் மேற்படி கையொப்பம் செய்தேன். 2 கையொப்பங்கள் போலிசாரிடம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாள்களில் என்ன குறிப்பாக எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.2 உத்திரமூர்த்தி தான் எனது நன்பர். அவர் சென்னையில் பில்டிங் வேலை செய்து வருகிறார். அவரை எனக்கு 8ம் வகுப்பு படிக்கும்போதேலிருந்து தெரியும். இன்று அ.சா.2 உத்திரமூர்த்தி என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். அவர் சொன்னதன் பேரில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான், ஆனால் நடந்த சம்பவம் எனக்கு தெரியும். எனது ஊருக்கும், அ.சா.2ன் ஊருக்கும் சுமார் ஒன்னறை கி.மீ தொலைவு இருக்கும். சம்பவ தூரத்திற்கும் எனது வீட்டிற்கும் ஒரு கி.மீ. தொலைவு இருக்கும். சம்பவமானது ராமனூர் கூட்ரோட்டில் உள்ள கணபதியின் பால் டைரி அருகே நடந்தது. சம்பவமானது மாலை 7.00 மணிக்கு நடந்தது. அதற்கு முன்னதாகவே ஏறிக்கோடியில் நான் சொன்னதுபோல் அ.சா.2க்கும், 1ம் எதிரிக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. அப்பொழுது மாலை

சுமார் 6.30 மணி இருக்கும். முதலில் அ.சா.2 உத்திரமூர்த்தி தான் 1ம் எதிரியிடம் ஏன் வெட்டியாக உட்கார்ந்து இருக்கிறாய் என்று கேட்டார். அ.சா.2 முதலில் கேட்கவில்லை என்றால் இப்படி ஒரு சம்பவம் நடந்து இருக்காது என்றால் சரிதான். அந்த சமயத்தில் நானும் அ.சா.2ம் மது அருந்தி இருந்தோம் என்றும், அதனால் தான் 1ம் எதிரியிடம் வேண்டும் என்றே நாங்கள் பிரச்சனைக்கு சென்றோம் என்றால் சரியல்ல. அ.சா.2 உத்திரமூர்த்தி மது அருந்தி இருந்தது அவரது மருத்துவ சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நாங்கள் தான் மது போதையில் வேண்டும் என்றே 1ம் எதிரியிடம் தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. 4 எதிரிகளும் எந்தெந்த இடத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அ.சா.2 ன் மீது ஆலங்காயம் காவல் நிலையத்தில் குடித்துவிட்டு பிரச்சனை செய்ததாக வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நானும் அ.சா.2ம் குடித்துவிட்டு 1ம் எதிரியிடம் வீண் பிரச்சனை செய்து அவரை அடித்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தாக்கவில்லை என்றும், அ.சா.2 எனது நன்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் பால் கடையில் இருந்தபோது சண்டை நடந்ததாக சொல்லிவிட்டு, தற்போது ஏறிக்கோடியில் சண்டை நடந்ததாக முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், அ.சா.2 க்கும் குடித்துவிட்டு மற்றவர்களிடம் பிரச்சனை செய்வது தான் வழக்கம் என்றும், அதனால் தான் இந்த சம்பவமே நடைபெற்றது என்றும், இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness